**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No. 522/2018**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ம் தேதி திங்கட் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நேரு | தொழில் | கூலி |
| தந்தை பெயர் | : அர்ஜுனன் | சமயம் | : |
| கிராமம் | : அனந்தபுரம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 59 |

தேதி 20.02.2023

**சாட்சியையும் எதிரிகளையும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியராஜ் Gr.1 - 1082 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.**

**( 1,2, எதிரிகள் இல்லை. குவிமுச 317 கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1. நான் அனந்தபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அனந்தபுரத்தில் மூட்டை தூக்கும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2015 ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் அனந்தபுரம் பஜாரில் மூட்டை தூக்கும் வேலையில் இருந்தபோது அனந்தபுரம் போலிசார் அங்கு வந்தார்கள். அப்போது குமார் என்பவரின் காய்கறி கடையில் நின்று கொண்டு விசாரணை செய்து கொண்டியிருந்தார்கள். நானும், அங்கு இருந்து விசாரணையை பார்த்துகொண்டியிருந்தேன். அப்போது போலிசார் பேப்பரில் கெட்ச் போட்டு வரைபடம் வரைந்தார்கள். அப்போது போலிசார் என்னை விசாரணை செய்ததற்கு சாட்சியாக கையொப்பம் போட கேட்டார்கள். நானும் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**( 28.05.2015 தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

**3.** இதற்கு முன்பாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்திருக்கிறேனா என்றால் 1 முறை வந்துள்ளேன். எங்கள் வீட்டிற்கும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1/4 கி.மீ. தூரம் இருக்கலாம்.

சாட்சி சொல்ல யாருடன் வந்தேன் என்றால் பஸ்சில் நான் மட்டும் வந்தேன் . குமார் என்னை அழைத்து வந்தாரா என்றால் இல்லை . தனியாகதான் வந்தேன். குமார் எனக்கு பழக்கப்பட்டவரா என்றால் ஒரே ஊர் பழக்கப்பட்டவர்தான் . குமார் கடையில் மூட்டை தூக்குவேனா என்றால் குமார் கடை உட்பட பஜாரில் மூட்டை தூக்குவேன்.

4. ஊரில் நடக்கும் பிரச்சணைக்கு அனந்தபுரம் காவல் நிலையத்திற் அடிக்கடி போவேனா என்றால் இல்லை. ஏதாவது ஒரு விஷயத்திற்கு போலிஸ் ஸ்டேசனுக்கு போவேன். போலிசார் வரைபடம் வரைந்தபோது எதற்காக அங்கு சென்றேன் என்றால் நான் லோடு இறக்கி கொண்டியிருந்தேன் . அப்போது போய் பார்த்தேன். அங்கு எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் 2 போலிசார்கள் இருந்தார்கள். என்னுடன் எத்தனை பேர் வேடிக்கை பார்த்தார்கள் என்றால் நிறைய பேர் இல்லை. ப 10, 15 பேர் இருந்திருப்பார்கள். அங்கு வந்திருந்த 2 போலிசார் பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

5. எத்தனை மணிக்கு போலிசார்கள் வந்தார்கள் என்றால் மணி எனக்கு ஞாபகம் இல்லை . பக்கத்தில் இருந்தேன் . போலிசார் என்னிடம் கேட்டு எழுதினார்களா என்றால் இல்லை. வேறு யாரையாவது கேட்டு எழுதினார்களா என்றால் அது எனக்கு தெரியவில்லை „ கோடு போட்டு எழுதிகொண்டியிருந்தார்கள். நான் கையொப்பம் செய்த தாளில் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 1 கையெழுத்து போட்டேன். வரைபடத்தின் கீழ் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. எழுதிய தாளில்தான் கீழ் கையொப்பம் செய்தேன் . என்ன விவரம் என்று சொன்னார்களா என்றால் விசாரணை செய்ததற்கு ஆதாரம் என்று சொன்னார்கள்.

6. விசாரணையை முடித்து நானும் , குமாரும் போலிஸ் ஸ்டேசனுக்குசென்றோமா என்றால் இல்லை . எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் நான் போட்டேனா என்றால் இல்லை . எழுதாத வெள்ளை தாளில் நான் கையொப்பம் செய்த பின்னர் நெருக்கி சுருக்கி மேலே எழுதிக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை . எழுதிய தாளில் போட்டேனா எழுதாத தாளில் கையொப்பம் போட்டேனா என்று ஞாபகம் இல்லை. போலிஸ் ஸ்டேசனுக்கு சென்று நான் கையொப்பம் செய்தேனா என்றால் பஜாரிலேயே தான் கையொப்பம் செய்தேன்„ போலிசார் நிறைய வழக்குகளில் பார்வை மகசர் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் அது போடவில்லை. என்னுடன் வேறு யார் கையொப்பம்

செய்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை . தற்போது சாட்சி நினைவுக்கு வந்ததாக கூறி சிற்றரசு கிராமத்தை சேர்ந்த காமராஜ் என்பவர் கையெழுத்து செய்ததாகவும் மேற்படி காமராஜ் இறந்துவிட்டதாகவும் சாட்சி கூறுகிறார்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.